மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதற்கு மாருக தமிழ் நாட்டில் இருப்பது போல் அந்த மாவட்டத்திலும் புகுத்த அரசாங்கம் யோசனை செய்து கொண்டிருக்கிறது.

'ஸ்ரீ' க்குப் பதில் 'திரு'.

* 229 வின.—திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

ஸ்ரீவில்லிபுத்தூர், ஸ்ரீரங்கம், ஸ்ரீவைகுண்டம் ஆகிய ஊர் பெயர்களில் 'ஸ்ரீ'க்குப் பதிலாகத் 'திரு'வைப் பயன்படுத்த அரசிடம் ஏதேனும் செயற் குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம்.

திரு. கா. காளிமுத்து: ஸ்ரீவில்லிப்புத்தூர் நகரசபையிலுள்ள காமராஜ் காங்கிரஸ் கட்சியினர் உட்பட அனைவரும் ஏகமனதாக திருவில்லிப்புத்தூர் என்று பெயரை மாற்ற வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்த ஊர் பெயரை திருவில்லிப்புத்தூர் என்று மாற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இதுபற்றி நம்முடைய அரசு மத்திய அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதியிருக்கிறது. மத்திய அரசு சரித்திர முக்கியத்துவும் வாய்ந்த நிலையில் ஸ்ரீவில்லிப்புத்தூர் என்ற பெயரே இருக்கட்டும் என்று கூறியிருக்கிறார்கள். அரசு தமிழ் வளர்ச்சித் துறையைக் கலந்து முடிவு எடுக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஊர்களுடைய பெயர்களை மாற்றும்போது அந்த ஊர் மக்களுடைய எண்ணம் என்ன என்பதை அறிய வழிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றனவா? முனிசிபாலிடியோ, பஞ்சாயத்தோ தீர்மானம் செய்தாலும் ஊர் மக்களின் எண்ணத்தையும் அறிந்து பெயர் மாற்றப்படுமா? இன்று பரங்கிமலை என்று இருப்பது பிருங்கமாமலை என்ற பழம் பெயராக இருந்தது. இப்போது ஆங்கிலப் பெயரைத் தமிழ்ப் பெயராக மாற்றி வைத்து விட்டார்கள். இப்படிப்பட்ட பிரச்சினைகளிலே அவசரப்பட்டு முடிவு எடுக்காமல் மக்களுடைய எண்ணத்தைத் தெரிந்து முடிவு எடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கனம் அங்கத்தினர் அவர்கள் பரங்கிமலை பற்றிக் குறிப்பிட்டார்கள். தனியாகக் கேள்விபோட்டால் அது பற்றிச் சொல்ல முடியும். ஊர் பெயர்களை மாற்றும்போது மக்களுடைய உணர்ச்சிகளை இந்த அரசு மதிக்கிறது. அங்காங்குள்ள நகராட்சிகள் பெயரை மாற்ற வேண்டுமென்று தீர்மானம் போடுவதோடு மாத்திரமல்லாமல் பெயரை மாற்ற வேண்டுமென்று அரசு உணர்ந்தால் அரசே மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்கிறது.

முள்ளுவாடியிலுள்ள மேய்ச்சல் நிலம்

* 230 வின.—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—